**செய்தி வெளியீடு எண்: 253** **நாள்: 03.04.2020**

**செய்தி வெளியீடு**

**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை அளிக்கப்பட்டுள்ள நன்கொடை விவரங்கள் – 3.4.2020**

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க பல்வேறு தீவிர நோய்தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இப்பணிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நன்கொடைகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் விடுத்த வேண்டுகோளினை ஏற்று, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து **31.3.2020 அன்று வரை, மொத்தம் 36 கோடியே 34 லட்சத்து 2 ஆயிரத்து 529 ரூபாய் வரப்பெற்றுள்ளது.**

இதன் தொடர்ச்சியாக, 1.4.2020 மற்றும் 2.4.2020 ஆகிய 2 நாட்களில் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மனமுவந்து நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்:

- **சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்** நிறுவனம் 4 கோடி ரூபாய்
- **டாஃபே நிறு**னம் 3 கோடி ரூபாய்
- **ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம்** 2 கோடியே 50 லட்சம் ரூபாய்
- **பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்** நிறுவனம் 2 கோடி ரூபாய்
- **வேலூர் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி** 1 கோடியே 25 லட்சம் ரூபாய்
- **மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் மகன் திரு.வி.பி. ஜெயபிரதீப் அவர்கள்** 1 கோடி ரூபாய்
- **டர்போ எரிசக்தி நிறுவனம்** 1 கோடி ரூபாய்
- **சுந்தரம் ஹோம் பைனான்ஸ் நிறுவனம்** 1 கோடி ரூபாய்
- **சாரிட்டீஸ் எய்ட் ஃபவுண்டேஷன் இந்தியா நிறுவனம்** 1 கோடி ரூபாய்

- **எம்.எஸ். வீல்ஸ் இந்தியா லிமிடெட், இந்திய மோட்டார் பார்ட்ஸ் மற்றும் & அக்சஸ்சரிஸ், ஆக்செல்ஸ் இந்தியா லிமிடெட், ராசி சீட்ஸ் நிறுவனம்** ஆகிய நிறுவனங்கள் தலா 50 லட்சம் ரூபாய்
- **சியோமி டெக்னாலஜி இந்தியா (பி) லிட்., சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி, ராயல் சுந்தரம் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி, ஸ்ரீ பதி அசோசியேட்ஸ் (பி) லிட்.** ஆகிய நிறுவனங்கள் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளனர்.
- **ரூட்ஸ் ஆட்டோ புராடக்ட்ஸ் நிறுவனம்** 25 லட்சம் ரூபாய்
- **காளீஸ்வரி ரிபைனரி நிறுவனம்** 24 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்
- **ராஜ்குமார் சேதுபதி** 15 லட்சம் ரூபாய்
- **மருதுபாண்டியர் கல்லூரி** 12 லட்சம் ரூபாய்
- **தருமபுரம் ஆதீனம்** 11 லட்சம் ரூபாய்
- **எஸ்.கே.எம். எக் (Egg)** புராடக்ட்ஸ் **ஏற்றுமதி நிறுவனம், கிருஷ்ணா ஜுவெல்லரி, வி.எஸ்.பி. இன்டஸ்டிரிஸ் பிரைவேட் லிமிடெட், திரு. பி. குணபாலன், மகாத்மா காந்தி சென்டினரி வித்யாலயா, Blessing டிவி, எஸ்.எம். என்ஜினியரிங் ஒர்க்ஸ்** ஆகிய நிறுவனங்கள் தலா 10 லட்சம் ரூபாய்

மேற்கண்ட 2 நாட்களில் மட்டும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து 25 கோடியே 96 இலட்சத்து 17 ஆயிரத்து 9 ரூபாய் வரப்பெற்றுள்ளது. **இதுவரை பெறப்பட்ட மொத்த தொகை 62 கோடியே 30 லட்சத்து 19 ஆயிரத்து 538 ரூபாய் ஆகும்.**

**மேற்படி நிவாரணம் அளித்த நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**